# SAINT RITA of Cascia

MAY 22



# *புனித ரீத்தா (1386-1456)*

இத்தாலியில் உள்ள காசியாவில் இவள் பிறந்தாள்.இவளுடைய பெற்றோர் ஆண்டவரது பாடுகள் மீது அதிக பக்தி உடையவர்கள். மக்களை சமாதானப்படுத்தி வைப்பவர்கள்.செபத்தின் பயனாக முதிர் பிராயத்தில் இவர்களுக்கு ரீத்தா பிறந்தாள். தனிமையை நேசித்த ரீத்தா,கன்னியாஸ்திரியாக விரும்பினாள்.இவளுடைய பெற்றோர் இவளுக்கு மணமுடித்து வைத்தனர். வந்த கணவன் கோப குணம் படைத்தவன்.அடிக்கடி சண்டையிடுவான்.மனைவியின் பக்தி முயற்சிகளை கேலி செய்வான். குடித்துவிட்டு வந்து மனைவியை துன்புறுத்துவான்.கணவனது குற்றங்களைப் பற்றி யாராவது பேசினால் அந்த பேச்சை மாற்றி விடுவாள். கணவனுக்காக செபித்தாள். தவஞ்செய்தாள்.இறுதியாக அவன் மனந்திரும்பினான். ஒருநாள் அவன் வெளியே சென்றிருக்கையில் யாரோ அவனை கொன்று விட்டார்கள். இது அவளுக்கு பெருந்துயரத்தைக் கொடுத்தது.முக்கியமாக, உடலை விட்டு உயிர் பிரியும்போது, ஆன்மா எந்த நிலையில் இருந்ததோ என்று ஏங்கினாள். தன் கணவனை கொலை செய்தவர்களை முழு மனதோடு மன்னித்தாள்.அவனுடைய இரு மக்களும் கொலைகாரனை பழிவாங்கத் தீர்மானித்தார்கள்.அவர்களைத் தடுக்க அவள் முயன்றாள்.முடிவில் அவர்கள் இந்த பாவத்தைச் செய்வதைவிட சாவது நலம் என்று கடவுளை நோக்கி கூறினாள்.ஓர் ஆண்டுக்குள் இரு மக்களும் இறந்தனர்.

அப்பொழுது அவளுக்கு வயது 30.கன்னியாஸ்திரியாக விரும்பினாள்.அவளை ஏற்றுக்கொள்ள இரு முறை மறுத்தார்கள்.ஆகஸ்டு மாதம் 14-ஆம் நாள் இரவில் புனித அகுஸ்தீன், புனித ஸ்நாபக அருளப்பர்.புனித தொலந்தீன் நிக்கோலாஸ் இவர்கள் மூவரும், செபித்துக்கொண்டிருந்த ரீத்தாவை, கன்னியர் மடத்தில் கோவிலுக்குள் அழைத்துச்சென்று திருப்பேழை முன் விட்டுச் சென்றார்கள்.காலையில் கோயிலுக்கு வந்த கன்னியர் அவளைக் கண்டனர். புதுமையாக நடந்திருப்பதை அறிந்து கொண்டனர். ஏனெனில் பூட்டுகள் திறக்கப்படாமலே அற்புதமாக அவள் உள்ளே நுழைந்திருந்தாள் ஆண்டவர் பட்ட பாடுகள் மீது இவளுக்கு அதிக பக்தியுண்டு. ஒருநாள் சிலுவையில் தொங்கிய இயேசுவின் முன் இவள் அமர்ந்து தியானிக்கையில் இயேசு முள்முடியிலிருந்து ஒரு முள் வெளி வந்து அவளது நெற்றியைத் தாக்கியது.அதனால் ஏற்பட்ட புண்ணை ஆற்ற முடியவில்லை.கொடி துர்நாற்றம் ஏற்பட்டது. இவள் தனியே ஒரு சிற்றறையில் வாழ்ந்து வேதனையின் கொடுமையை மகிழ்வுடன் சகித்தாள். இவள் இறந்த பின் இவளது வேண்டுதலால் எண்ண முடியாத புதுமைகள் நடந்தமையால் “முடியாத காரியங்களைச் சாதிப்பவள்” எனும் பெயர் இவளுக்குக் கிடைத்தது.

**சிந்தனை:**

மனைவியர் கணவனது ஆன்மா மீது ரீத்தாவைப் போல் அதிக அக்கறை காட்ட வேண்டும்.

**செபம்:**

புனித ரீத்தம்மாளே, கணவரால் தொல்லைலப்படும் பெண்களுக்காக இயேசுவை மன்றாடும்.